NUTRI-GRADE

A B C D 0% sugar

Tanda Nutri-Grade untuk minuman Nutri-Grade

Panduan Penggunaan untuk Permohonan Grafik

Nutri-Grade பானங்களுக்கான ஊட்டச்சத்துத் தரக் குறியீடு

வரைபடப் பயன்பாடுகளுக்கான வழிகாட்டிக் குறிப்பு

Updated as of 31 March 2022

Kandungan | உள்ளடக்கம்

	Bahagian பிரிவு
Tanda Nutri-Grade untuk Minuman Nutri-Grade | Nutri-Grade பானங்களுக்கான ஊட்டச்சத்துத் தரக் குறியீடு	**1**
Pengenalan | அறிமுகம்	1.1
Komponen dan Spesifikasi Tanda | முத்திரையின் அம்சங்களும் விவரக் குறிப்புகளும்	**2**
Gred dan Tahap Gula | தரக் குறியீடும் சர்க்கரை அளவும்	2.1
Jenis fon dan Palet Warna | எழுத்துரு வகையும் நிறமும்	2.2
Perkadaran dan Grid | விகிதாச்சாரமும் கட்டமைப்பும்	2.3
Varian Tanda dan Batas Pemakanan | முத்திரையின் மாற்றுருக்களும் ஊட்டச்சத்துகளின் அளவும்	**3**
Varian Melintang | கிடைநிலை மாற்றுருக்கள்	3.1
Varian Menegak | நிமிர்நிலை மாற்றுருக்கள்	3.2
Varian Tanda dan Kriteria Penilaian | முத்திரையின் மாற்றுருக்களும் தரவகைப்படுத்துவதற்கான தகுதிவரம்புகளும்	3.3
Garis Panduan Penggunaan | பயன்பாட்டு வழிகாட்டிக் குறிப்புகள்	**4**
Ruang Kosong Minimum | குறைந்தபட்ச வெற்றிடம்	4.1
Penempatan pada Pembungkusan | பொட்டலத்தில் அமைவிடம்	4.2
Produk Individu | தனித்தனிப் பொருட்கள்	4.2.1
Multipek | பல்பொருட்களைக் கொண்ட பொட்டலங்கள்	4.2.2
Saiz tanda | முத்திரையின் அளவு	4.3
Penggunaan tanda Sempena Lambang Pilihan Lebih Sihat (HCS) | ஆரோக்கியத் தேர்வுச் சின்னத்துடன் முத்திரையைப் பயன்படுத்துதல்	4.4
Permohonan yang sempurna | ஏற்புடைய பயன்பாடுகள்	4.5
Permohonan yang Tidak Diluluskan | அனுமதிக்கப்படாத பயன்பாடுகள்	4.6
Contoh Permohonan Pembungkusan Produk | பொருட்களைப் பொட்டலமிடுவதற்கான பயன்பாட்டு உதாரணங்கள்	**5**
Contoh Permohonan – Pakej Produk Individu | பயன்பாட்டு உதாரணங்கள் – தனித்தனிப் பொருட்களுக்கான பொட்டலங்கள்	5.1
Varian Melintang - Karton dan Minuman dalam paket | கிடைநிலை மாற்றுரு – அட்டைப் பெட்டிகளும் பொட்டல பானங்களும்	5.1.1
Varian Melintang – Tin dan botol PET | கிடைநிலை மாற்றுரு – தகரக் குவளைகளும் PET போத்தல்களும்	5.1.2
Varian Menegak - Tin dan Botol | நிமிர்நிலை மாற்றுரு - தகரக் குவளைகளும் போத்தல்களும்	5.1.3
Contoh Permohonan – Multipek | பயன்பாட்டு உதாரணங்கள் – பல்பொருட்களைக் கொண்ட பொட்டலங்கள்	5.2
Multipek dengan produk yang serupa dalam setiap pek | ஒரே வகையான பொருட்களைக் கொண்ட பல்பொருள் பொட்டலம்	5.2.1
Multipek dengan pelbagai produk dalam setiap pek | பல்வேறு பொருட்களைக் கொண்ட பல்பொருள் பொட்டலம்	5.2.2
Garis Panduan Penggunaan untuk Permohonan Pembungkusan Bukan Produk | பொருட்கள் பொட்டலமிடப்படாத சூழல்களுக்கான பயன்பாட்டு வழிகாட்டிக் குறிப்புகள்	**6**
Permohonan - Dispenser Minuman Automatik | பயன்பாடு - பானங்களுக்கான தானியங்கி இயந்திரங்கள்	6.1
Permohonan - Mesin Layan Diri dengan paparan produk | பயன்பாடு - பொருட்களின் உருவச் சித்திரங்களுடன் கூடிய தானியங்கி இயந்திரங்கள்	6.2
Permohonan - Mesin Layan Diri tanpa paparan produk | பயன்பாடு - பொருட்களின் உருவச் சித்திரங்களற்ற தானியங்கி இயந்திரங்கள்	6.3
Permohonan - Platform e-dagang | பயன்பாடு - மின்-வர்த்தகத் தளங்கள்	6.4
Permohonan – Iklan digital | பயன்பாடு - மின்னிலக்க விளம்பரங்கள்	6.5
Permohonan – Format Cetakan Besar | பயன்பாடு - பெரிய அச்சு வடிவங்கள்	6.6
Permohonan – Format Cetakan Kecil | பயன்பாடு - சிறிய அச்சு வடிவங்கள்	6.7

Pengenalan
அறிமுகம்

Kementerian Kesihatan Singapura memperkenalkan pelabelan pemakanan yang wajib dan larangan pengiklanan untuk minuman Nutri-Grade yang dijual di Singapura.

Peraturan baru ini bertujuan untuk memberi maklumat kepada pengguna mengenai kandungan gula dan lemak tepu di dalam minuman Nutri-Grade, dan untuk menggalakkan industri ini menghasilkan pilihan lain yang rendah gula, rendah lemak agar pengguna dapat membuat pilihan termaklum di antara jenis minuman yang ada dan mempunyai pilihan yang lebih sihat.

Terdapat empat gred yang berkod warna untuk tanda Nutri-Grade. Gred A, sesuai dengan kandungan gula dan lemak tepu paling rendah, berwarna hijau gelap. Gred D, yang mempunyai kandungan gula dan lemak tepu paling tinggi, berwarna merah. Tanda Nutri-Grade akan diwajibkan untuk minuman Nutri-Grade Gred “C” dan “D”, tetapi boleh ditandakan secara sukarela untuk minuman Nutri-Grade Gred “A” dan “B”. Juga, iklan minuman Nutri-Grade Gred “D” di tempat jualan mesti memaparkan tanda Nutri-Grade.

Dokumen ini bertujuan untuk memberi panduan mengenai bagaimana tanda Nutri-Grade harus digunakan pada pembungkusan produk dan tetapan lain. Maklumat lebih terperinci mengenai keperluan pelabelan dan iklan boleh didapati dalam Dokumen Peraturan Makanan dan Panduan Industri.

சிங்கப்பூரில் சில்லறை வர்த்தகங்களால் விற்கப்படும் Nutri-Grade பானங்களுக்கான கட்டாய ஊட்டச்சத்து முத்திரைகளையும் விளம்பரக் கட்டுப்பாடுகளையும் சிங்கப்பூர் சுகாதார அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

Nutri-Grade பானங்களில் உள்ள சர்க்கரை, சீரமைக்கப்பட்ட கொழுப்பு ஆகியவற்றின் அளவு பற்றிய தகவல்களை வாடிக்கையாளர்களுக்கு அளிப்பதும், குறைவான சர்க்கரை, குறைவான கொழுப்பு உள்ள மாற்று பானங்களை உருவாக்க தொழில்துறையை ஊக்குவிப்பதும் புதிய நடவடிக்கையின் நோக்கமாகும். அப்போதுதான், வாடிக்கையாளர்கள் அனைத்து பானங்கள் பற்றியும் மேலும் அறிந்துகொண்டு தெளிவாக முடிவெடுக்கலாம். அதோடு தேர்ந்தெடுப்பதற்கும் மேலும் ஆரோக்கியமான தெரிவுகளைக் கொண்டிருக்கலாம்.

Nutri-Grade எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த ஊட்டச்சத்து முத்திரை நான்கு நிறக் குறியீடுகளைக் கொண்டிருக்கும். ஆகக் குறைவான சர்க்கரை, சீரமைக்கப்பட்ட கொழுப்பு அளவுகள், தரம் ‘A’ என அடர் பச்சை நிறத்தில் குறிக்கப்படும். ஆக அதிகமான சர்க்கரை, சீரமைக்கப்பட்ட கொழுப்பு அளவுகள், ‘தரம் D’ என சிவப்பு நிறத்தில் குறிக்கப்படும். ‘C’, ‘D’ தரங்களிலான பானங்களுக்கு Nutri-Grade முத்திரை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால், ‘A’, ‘B’ தரங்களிலான பானங்களுக்கு அது கட்டாயமாக்கப்படவில்லை. அதே வேளையில், தரம் ‘D’ வகையிலான பானங்கள் விற்கப்படும் இடங்களில் உள்ள விளம்பரங்கள், Nutri-Grade முத்திரைகளைக் காட்சிப்படுத்தவேண்டும்.

Nutri-Grade முத்திரையைப் பொருட்களின் பொட்டலங்களிலும் இதர சூழல்களிலும் எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பது தொடர்பிலான வழிகாட்டிக் குறிப்புகளை வழங்குவதற்காக இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. முத்திரையிடுதல், விளம்பரம் ஆகியவற்றுக்கான தகுதிவரம்புகள் குறித்த மேல் விவரங்கள், உணவுக் கட்டுப்பாடுகள், தொழில்துறை வழிகாட்டி ஆவணத்தில் கிடைக்கப்பெறும்.

Gred dan Tahap Gula

தரக் குறியீடும் சர்க்கரை அளவும்





Gred

Terdapat empat jenis gred yang berkod warna, dari Gred A (hijau gelap) hingga Gred D (merah), berdasarkan kandungan gula dan lemak tepu dalam minuman. Gred sesuatu minuman itu ditentukan berdasarkan sistem penilaian tanda yang tersirat, yang diringkaskan didalam Bahagian 3.3.

Paras Gula

Sebagai tambahan kepada gred, tanda Nutri-Grade merangkumi paras gula minuman, dalam bentuk peratusan, yang digenapkan menurut angka terdekat.

Komponen-komponen tanda adalah tetap dan tidak boleh diubah atau diubah suai dengan cara apa sekali pun. Hanya nilai kadar gula mungkin dapat diubah untuk mencerminkan kandungan nutrien yang tepat didalam minuman. Ketinggian nilai kadar gula adalah sama dengan perkataan “NUTRI-GRADE” pada tanda.

Lebih banyak maklumat mengenai sistem penilaian dan cara memperolehi kadar gula boleh didapati dalam Dokumen Peraturan Makanan dan Panduan Industri.

தரம்

பானத்தில் உள்ள சர்க்கரை, சீரமைக்கப்பட்ட கொழுப்பு ஆகியவற்றின் அளவுகளின் அடிப்படையில், தரம் ‘A’ (அடர் பச்சை) முதல் ‘D’ (சிவப்பு) வரை, நான்கு நிறக் குறியீடுகள் உள்ளன. குறிப்பிட்ட ஒரு பானத்தின் தரம், பிரிவு 3.3-இல் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ள முத்திரையின் அடிப்படைத் தரப்படுத்தும் கட்டமைப்பைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது.

சர்க்கரை அளவு

தரம் தவிர, பானத்தில் உள்ள சர்க்கரை அளவையும் Nutri-Grade முத்திரை விழுக்காட்டாகக் (மிக நெருங்கிய முழு எண்ணாக) கொண்டிருக்கும்.

முத்திரையின் அம்சங்கள் நிலையானவை. அவை எவ்வகையிலும் மாற்றப்பட இயலாது. சர்க்கரை அளவு மட்டுமே, பானத்தின் துல்லியமான ஊட்டச்சத்து அளவைக் குறிக்கும் வகையில் மாற்றப்படலாம். சர்க்கரை அளவைக் குறிக்கும் எண்ணின் உயரம், முத்திரையில் இடம்பெற்றுள்ள ‘NUTRI-GRADE’ சின்னத்தின் உயரத்திற்கு ஈடாக இருக்கவேண்டும்.

தரப்படுத்தும் கட்டமைப்பு, சர்க்கரை அளவைக் கண்டறியும் முறைகள் ஆகியவை குறித்த மேல் விவரங்கள், உணவுக் கட்டுப்பாடுகள், தொழில்துறை வழிகாட்டி ஆவணத்தில் கிடைக்கப்பெறும்.

Jenis fon dan Palet Warna
எழுத்துரு வகையும் நிறமும்

Arial Bold
Arial தடித்த வகை

A B C D E F G H I J K L M N O P Q R S T U V W X Y Z

a b c d e f g h i j k l m n o p q r s t u v w x y z

1 2 3 4 5 6 7 8 9 0 %





Jenis fon

Arial Bold

Ini adalah satu-satunya fon yang harus digunakan untuk menandakan tahap gula. Fon lain dan ketebalan lain fon Arial tidak dibenarkan untuk digunakan.

Palet warna

Tanda Nutri-Grade hendaklah dicetak dengan warna penuh CMYK atau Pantone. Sila rujuk kepada kod Pantone untuk warna yang tepat.

Tanda Nutri-Grade tidak boleh dicetak atau dinyatakan dalam palet monokrom.

எழுத்துரு வகை

Arial தடித்த வகை

சர்க்கரை அளவைக் குறிப்பிடுவதற்கு இந்த எழுத்துரு வகை மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். மற்ற எழுத்துருக்கள் அல்லது ‘Arial’ எழுத்துருவின் மற்ற வகைகள் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டா.

நிறங்கள்

Nutri-Grade முத்திரையை முழு வண்ண CMYK அல்லது Pantone வகையில் அச்சிடவேண்டும். தயவுசெய்து, துல்லியமான நிறங்களின் வெளிப்பாட்டிற்கு Pantone குறியீடுகளைப் பாருங்கள். Nutri-Grade முத்திரையை மோனோக்ரோம் நிறத்தில் அச்சிடவோ அல்லது வெளிப்படுத்தவோ கூடாது.

	a	b	c	d	e, f, g	h
Pantone®	2423C	375C	1375C	2035C	Black C	
CMYK	100C 25M 100Y	55C 100Y	40M 85Y	20C 100M 100Y 8K	100K	Warna Asas berwarna Putih
RGB	R0 G128 B61	R134 G188 B37	R247 G168 B51	R183 G25 B24	R29 G29 B27	வெள்ளைப் பின்னணி

Perkadaran dan Grid

விகிதாச்சாரமும் கட்டமைப்பும்







Perkadaran

Hubungan perkadaran diantara unsur-unsur ini adalah tetap dan ditunjukkan dalam panduan ini. Dalam semua situasi, karya seni digital hendaklah digunakan sebagaimana yang disediakan Pemerintah Singapura dan tidak boleh diubah dengan apa cara sekalipun, kecuali untuk melaraskan dengan keseimbangan ukuran yang diperlukan dan untuk memasukkan nilai paras gula.

Grid

Grid ditentukan oleh ketinggian satu huruf besar versi ‘A’, ‘B’, ‘C’ atau ‘D’. Semasa permohonan, sila periksa grid pembinaan untuk memastikan setiap bahagian tanda Nutri-Grade berada didalam lingkungan spesifikasi grid.

விகிதாச்சாரம்

பல்வேறு அம்சங்களின் விகிதாச்சாரத் தொடர்புகள் நிலையானவை. அவை இந்த வழிகாட்டிக் குறிப்பில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அனைத்து சூழல்களிலும், சிங்கப்பூர் அரசாங்கத்தால் அளிக்கப்பெற்ற மின்னிலக்க உருவச்சித்திரம், அவ்வாறே பயன்படுத்தப்படவேண்டும்; எவ்வகையிலும் மாற்றியமைக்கப்படக் கூடாது - தேவைப்படும் அளவிற்கு ஈடாக விகிதாச்சாரப்படி மாற்றுதல், சர்க்கரை அளவைக் குறிப்பிடுவதற்கான எண்களை உள்ளடக்குதல் தவிர.

கட்டமைப்பு

இந்தக் கட்டமைப்பு, ‘A’, ‘B’, ‘C’ அல்லது ‘D’ ஆகிய எழுத்துக்களின் பெரிய உருவங்களின் உயரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது. பயன்பாட்டின்போது, தயவுசெய்து Nutri-Grade முத்திரையின் ஒவ்வோர் அம்சமும், கட்டமைப்பின் விவரக் குறிப்புகளுக்கு உட்பட்டு உள்ளனவா என்பதை உறுதிசெய்ய, உருவாக்கக் கட்டமைப்பைச் சரிபாருங்கள்.

Varian Melintang

கிடைநிலை மாற்றுருக்கள்

Varian Melintang Nutri-Grade 1.1
Nutri-Grade கிடைநிலை மாற்றுரு 1.1



Varian Melintang Nutri-Grade 1.2
Nutri-Grade கிடைநிலை மாற்றுரு 1.2



Varian Melintang Nutri-Grade 1.3
Nutri-Grade கிடைநிலை மாற்றுரு 1.3



Varian Melintang Nutri-Grade 1.4
Nutri-Grade கிடைநிலை மாற்றுரு 1.4



Tanda Nutri-Grade diletakkan sebagai varian melintang dan menegak. Varian melintang harus digunakan sebagai pemilihan asal, kecuali dalam situasi di mana varian menegak mungkin lebih sesuai (rujuk bahagian 3.2).

Nutri-Grade முத்திரை கிடைநிலை, நிமிர்நிலை ஆகிய இரு மாற்றுருக்களில் படைக்கப்படுகிறது. நிமிர்நிலை மாற்றுருக்கள் மேலும் ஏற்புடையனவாக (பிரிவு 3.2 பார்க்கவும்) இருக்கின்ற சூழல்கள் தவிர, கிடைநிலை மாற்றுருக்களே இயல்பாகப் பயன்படுத்தப்படவேண்டும்.

Varian Menegak
நிமிர்நிலை மாற்றுருக்கள்

Varian menegak 2.1
Nutri-Grade

Nutri-Grade
நிமிர்நிலை மாற்றுரு 2.1

Varian menegak 2.2
Nutri-Grade

Nutri-Grade
நிமிர்நிலை மாற்றுரு 2.2

Varian menegak 2.3
Nutri-Grade

Nutri-Grade
நிமிர்நிலை மாற்றுரு 2.3

Varian menegak 2.4
Nutri-Grade

Nutri-Grade
நிமிர்நிலை மாற்றுரு 2.4

Contoh keadaan di mana varian menegak boleh digunakan
நிமிர்நிலை மாற்றுருவைப் பயன்படுத்தக்கூடிய சூழல்களின் உதாரணம்

Rajah 1:
படம் 1:



Rajah 2:
படம் 2:



Rajah 3:
படம் 3:



Keadaan di mana varian menegak boleh digunakan:

Varian menegak hanya boleh digunakan apabila penggunaan varian melintang menurut panduan penggunaan ini tidak mungkin dapat dipatuhi. Penggunaan varian menegak termasuk tetapi tidak terhad kepada senario berikut:

1. Tiada ruang melintang yang mencukupi pada pembungkusan untuk menampilkan varian melintang menurut ukuran minimum dan ruang kosong yang diperlukan, seperti yang terlihat pada Rajah 1 dan 2 (lihat bahagian 4.1 dan 4.3 untuk garis panduan ruang kosong dan ukuran minimum).

2. Latar belakang pembungkusan kelihatan terlalu sesak sehingga varian menegak lebih mudah dibaca dibandingkan dengan varian melintang, seperti yang terlihat pada Rajah 3 (lihat bahagian 5.1.3 untuk contoh permohonan.

Sekiranya syarikat memilih untuk menggunakan varian menegak, HPB mungkin meminta lebih banyak maklumat untuk mewajarkan pemilihan tersebut.

நிமிர்நிலை மாற்றுருக்களைப் பயன்படுத்தக்கூடிய சூழல்கள்:

பயன்பாட்டு வழிகாட்டிக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் கிடைநிலை மாற்றுருக்களைப் பயன்படுத்த முடியாத சூழலில் மட்டுமே, நிமிர்நிலை மாற்றுருக்கள் பயன்படுத்தப்படலாம். நிமிர்நிலை மாற்றுருக்கள் பின்வரும் சூழல்களில் (ஆனால், இவை மட்டுமன்று) பயன்படுத்தப்படலாம்:

1. படம் 1, 2 ஆகியவற்றில் சித்தரிக்கப்பட்டிருப்பது போல், கிடைநிலையிலான மாற்றுருவை அதன் குறைந்தபட்ச அளவு, தேவையான வெற்றிடம் ஆகியவற்றிற்கு ஏற்ப காட்சிப்படுத்துவதற்குப் போதுமான கிடைநிலை இடம் இல்லை (வெற்றிடம், குறைந்தபட்ச அளவு ஆகியவை தொடர்பிலான வழிகாட்டிக் குறிப்புகளுக்கு, பிரிவு 4.1, 4.3 ஆகியவற்றைப் பாருங்கள்).

2. படம் 3-இல் சித்தரிக்கப்பட்டிருப்பது போல், பொட்டலத்தின் பின்னணியில் பல அம்சங்கள் இடம்பெற்றிருப்பதால், கிடைநிலை மாற்றுருவைவிட நிமிர்நிலை அடிப்படையிலான மாற்றுருவே படிப்பதற்கு மேலும் சுலபமாக இருக்கும் (பயன்பாட்டு உதாரணத்திற்கு, பிரிவு 5.1.3 பாருங்கள்)

நிறுவனம் நிமிர்நிலையிலான மாற்றுருவைப் பயன்படுத்த முடிவெடுத்தால், சுகாதார மேம்பாட்டு வாரியம், அதன் முடிவை நியாயப்படுத்துவதற்கான கூடுதல் தகவல்களைக் கேட்கலாம்.

Varian Tanda dan Kriteria Penilaian

முத்திரையின் மாற்றுருக்களும் தரவகைப்படுத்துவதற்கான தகுதிவரம்புகளும்

Gred தரம்	Varian melintang (pemilihan asal) கிடைநிலையிலான மாற்றுருக்கள் (அடிப்படை)	Varian menegak (Rujuk panduan penggunaan untuk varian menegak di bahagian 3.2) நிமிர்நிலையிலான மாற்றுருக்கள் (பிரிவு 3.2-இல் நிமிர்நிலை மாற்றுருக்களுக்கான பயன்பாட்டு வழிகாட்டிக் குறிப்புகளைப் பாருங்கள்)	Batasan Pemakanan ஊட்டச்சத்து அளவு
A	NUTRI-GRADE A B C D 0% sugar	NUTRI-GRADE A B C D 0% sugar	≤ 1g/100ml gula[1] | ≤ 1கிராம்/100 மில்லிலிட்டர் சர்க்கரை[1] ≤0.7g/100ml lemak tepu | ≤0.7கிராம்/100 மில்லிலிட்டர் சீரமைக்கப்பட்ட கொழுப்பு Tiada pengganti bukan gula[2] | சர்க்கரை அல்லாத மாற்றுப் பொருட்கள் ஏதுமில்லை[2]
B	NUTRI-GRADE A B C D 4% sugar	NUTRI-GRADE A B C D 4% sugar	>1-5g/100ml gula[1] | >1-5 கிராம்/100 மில்லிலிட்டர் சர்க்கரை[1] >0.7-1.2g/100ml lemak tepu | >0.7-1.2 கிராம்/100 மில்லிலிட்டர் சீரமைக்கப்பட்ட கொழுப்பு
C	NUTRI-GRADE A B C D 8% sugar	NUTRI-GRADE A B C D 8% sugar	>5-10g/100ml gula[1] | >5-10 கிராம்/100 மில்லிலிட்டர் சர்க்கரை[1] >1.2-2.8g/100ml lemak tepu | >1.2-2.8 கிராம்/100 மில்லிலிட்டர் சீரமைக்கப்பட்ட கொழுப்பு
D	NUTRI-GRADE A B C D 12% sugar	NUTRI-GRADE A B C D 12% sugar	>10g/100ml gula[1] | >10 கிராம்/100 மில்லிலிட்டர் சர்க்கரை[1] >2.8g/100ml lemak tepu | >2.8 கிராம்/100 மில்லிலிட்டர் சீரமைக்கப்பட்ட கொழுப்பு

Gred ditentukan oleh kandungan gula dan lemak dalam minuman seperti yang tertera pada rajah. Gred A selaras dengan paras gula dan lemak tepu paling rendah, dan Gred D untuk paras gula dan lemak tepu yang paling tinggi. Gred minuman Nutri-Grade adalah yang lebih rendah daripada berikut:

a. Gred kandungan gula, dan

b. Gred kandungan lemak tepu.

Sebagai tambahan, minuman gred "A" tidak boleh mengandungi sebarang pengganti bukan gula[2].

Lebih banyak maklumat mengenai sistem penilaian dan batasan pemakanan ini boleh didapati dalam Dokumen Peraturan Makanan dan Panduan Industri.

[1] Ini merujuk kepada jumlah gram gula setiap 100 ml, ditolak gram laktosa dan galaktosa setiap 100 ml, seperti yang diisytiharkan pada Panel Maklumat Pemakanan (NIP). Sekiranya jumlah laktosa dan/atau galaktosa tidak diisytiharkan pada NIP, maka ia dianggap sifar.

[2] Ini merujuk kepada sebarang bahan aspartam, alkohol gula, alkohol karbohidrat, alkohol polihidrik dan sebarang bahan lain yang ditambahkan sebagai pengganti gula untuk memberikan rasa manis.

பானத்தில் உள்ள சர்க்கரை, சீரமைக்கப்பட்ட கொழுப்பு ஆகியவற்றின் அளவைக் கொண்டு தரம் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆகக் குறைவான சர்க்கரை, சீரமைக்கப்பட்ட கொழுப்பு அளவுகளைத் தரம் 'A'-யும், ஆக அதிகமான சர்க்கரை, சீரமைக்கப்பட்ட கொழுப்பு அளவுகளைத் தரம் 'D'-யும் குறிக்கின்றன. பின்வருபவற்றைப் பொறுத்து, பானத்தின் தரம் குறையும்:

a. சர்க்கரை அளவு அடிப்படையிலான தரம், மற்றும்

b. சீரமைக்கப்பட்ட கொழுப்பு அளவு அடிப்படையிலான தரம்

மேலும், "A" தரப்படுத்தப்பட்ட பானங்கள் சர்க்கரைக்கான மாற்றுவகை உட்பொருட்களைக் கொண்டிருக்கக் கூடாது.[2]

தரநிலைப்படுத்தும் கட்டமைப்பு, ஊட்டச்சத்து அளவு ஆகியவை குறித்த மேல் விவரங்கள், உணவுக் கட்டுப்பாடுகள், தொழில்துறை வழிகாட்டி ஆவணத்தில் கிடைக்கப்பெறும்.

[1] இது, ஊட்டச்சத்துத் தகவலில் உள்ளபடி, சர்க்கரை மாவுச்சத்தும் பால்வெல்லமும் நீக்கப்பெற்ற 100 மில்லிலிட்டர் பானத்திற்கான மொத்த சர்க்கரை அளவின் கிராம் எடையைக் குறிக்கின்றது. சர்க்கரை மாவுச்சத்து, பால்வெல்லம் ஆகியவற்றின் அளவு குறிப்பிடப்படவில்லை எனில், அது பூஜியமாக எடுத்துக்கொள்ளப்படலாம்.

[2] செயற்கை சுவைப்பொருள், சர்க்கரை மதுவகை, மாவுச்சத்து மதுவகை, பாலிஹைட்ரிக் மதுவகை அல்லது சர்க்கரைக்கு மாற்றாக இனிப்பான சுவையை வழங்கும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ள எந்தவொரு பொருளையும் இது குறிக்கின்றது.

Ruang Kosong Minimum
குறைந்தபட்ச வெற்றிடம்

Varian melintang
கிடைநிலை மாற்றுரு



Contoh Ruang Kosong
வெற்றிட உதாரணம்



Varian menegak
நிமிர்நிலை மாற்றுரு



Contoh Ruang Kosong
வெற்றிட உதாரணம்



Ruang Kosong Minimum
Untuk memastikan ia mudah dibaca dan dilihat, sila pastikan bahawa jumlah ruang kosong minimum sentiasa digunakan di sekitar tanda Nutri-Grade. Ruang kosong minimum untuk disediakan di sekeliling tanda Nutri-Grade ialah sekurang-kurangnya satu ketinggian versi huruf besar ‘A’, ‘B’, ‘C’ atau ‘D’.

குறைந்தபட்ச வெற்றிடம்
அதிகபட்சம் படிப்பதற்கும் பார்ப்பதற்கும் வசதியாக, Nutri-Grade முத்திரையைச் சுற்றிலும் குறைந்தபட்ச வெற்றிடம் இருப்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள். குறைந்தபட்ச வெற்றிடம், ‘A’, ‘B’, ‘C’, ‘D’ ஆகிய எழுத்துகளின் பேரெழுத்து வடிவத்தின் உயரம் இருக்கவேண்டும்.

Penempatan pada Pembungkusan – Produk Individu
பொட்டலத்தில் அமைவிடம் – தனித்தனிப் பொருட்கள்

Rajah 1: Ruang FOP bungkusan dengan ruang cetakan penuh
படம். 1: முழுமையாக அச்சடிக்கப்பெற்ற பகுதியைக் கொண் பொட்டலங்களின் முகப்புப் பரப்பளவு



W = 1/3 lilitan
அகலம் (W) = 1/3 சுற்றளவு

W = 1/3 lilitan
அகலம் (W) = 1/3 சுற்றளவு

Rajah 2: Ruang FOP bungkusan dengan ruang separuh cetakan, pembalut produk atau label bungkusan
படம். 2: முழுமையாக அச்சடிக்கப் பெறாத பகுதி, பொருள் வில்லை அல்லது முத்திரைப் பகுதியைக் கொண்ட பொட்டலங்களின் முகப்பு பரப்பளவு



W = 1/3 lilitan
அகலம் (W) = 1/3 சுற்றளவு

W = 1/3 lilitan
அகலம் (W) = 1/3 சுற்றளவு

Rajah 3: Ruang FOP bungkusan dengan ruang berbilang cetakan dibungkusan produk atau label bungkusan
படம். 3: ஒன்றுக்கு மேற்பட்ட அச்சடிக்கப்பெற்ற பகுதிகள், பொருட்களின் வில்லைகள் அல்லது முத்திரைகள் கொண்ட பொட்டலங்களின் முகப்புப் பரப்பளவு



H = H1 + H2

W = W1 (lebih lebar dari W2)
அகலம் = W1 (W2-யைக் காட்டிலும் அகலமானது)

= ⅓ lilitan
= ⅓ சுற்றளவு

Garis Panduan Pembungkusan Umum

- Tanda Nutri-Grade harus berada di permukaan hadapan (FOP) bungkusan produk.
- FOP adalah bahagian hadapan bungkusan produk di mana nama dan jenama minuman Nutri-Grade (jika ada jenama) diletakkan; dan itu adalah dalam bidang penglihatan utama bakal pembeli.
- Untuk bungkusan-bungkusan yang mempunyai permukaan yang berbilang yang memenuhi definisi FOP (contohnya karton segi empat dimana kedua-dua bahagian hadapan dan belakangnya adalah sama dan mengandungi maklumat produk utama), tanda Nutri-Grade diperlukan pada sekurang-kurangnya satu permukaan, dan permukaan yang mengandungi tanda Nutri-Grade seharusnya menghadap bakal pembeli sebagai pilihan utama di tempat penjualan.
- Sebagai pilihan asal, tanda Nutri-Grade harus berada di dalam ruang yang dicetak, pada pembalut produk atau label bungkusan. Sekiranya ini tidak mungkin, ia boleh diletakkan di tempat lain di permukaan hadapan bungkusan.
- Dalam semua kes, ruang FOP ditentukan oleh ketinggian (H) dan lebar (W) ruang yang dicetak, pembalut produk atau label bungkusan.
- Sekiranya bungkusan mempunyai lebih dari satu ruang yang dicetak, pembalut produk atau label bungkusan, dimensi keseluruhan ruang FOP adalah (lihat Rajah 3):
  a) Jumlah H = jumlah daripada ketinggian setiap ruang bercetak, pembalut produk atau label bungkusan.
  b) Jumlah W = lebar yang paling luas daripada ruang bercetak, pembalut produk atau label bungkusan.

பொட்டலமிடுவதற்கான பொதுவான வழிகாட்டிக் குறிப்புகள்

- பொருளின் பொட்டலத்தின் முகப்பின் மேற்பரப்பில் Nutri-Grade முத்திரை இடம்பெற்றிருக்கவேண்டும்.
- முகப்பு என்பது பொருளின் பொட்டலத்தின் முன்பக்கமாகும். அங்குதான், பொருளின் பெயரும் சின்னமும் (சின்னம் இருப்பின்) இடம்பெற்றிருக்கும். அப்பகுதி, வருங்கால வாடிக்கையாளரின் பார்வைக்கு உடனடியாகத் தென்படுவதாகும்.
- முகப்பின் தன்மைகளுடன் ஒன்றுக்கு மேலான மேற்பரப்புகளைக் கொண்ட பொட்டலங்களில் (எ.கா. பொருளின் முக்கிய விவரக் குறிப்புகளுடன் ஒரே மாதிரியான முன்பக்கத்தையும் பின்பக்கத்தையும் கொண்டிருக்கும் செவ்வக வடிவிலான அட்டைப் பெட்டிகள்), Nutri-Grade முத்திரை குறைந்தது ஒரு பக்கத்திலாவது இருக்கவேண்டும். அவ்வாறு, Nutri-Grade முத்திரை இடம்பெற்றுள்ள பக்கம், விற்பனைத் தளங்களில் வருங்கால வாடிக்கையாளரை நோக்கி வைக்கப்படவேண்டும்.
- அடிப்படையில், Nutri-Grade முத்திரை பொட்டலத்தின் அச்சடிக்கப்பெற்ற பகுதியில், பொருள் வில்லையில் அல்லது முத்திரைப் பகுதியில் இடம்பெற்றிருக்கவேண்டும். அது சாத்தியம் இல்லையெனில், பொட்டலத்தின் முகப்பில் வேறு எங்கு வேண்டுமானாலும் இடம்பெற்றிருக்கலாம்.
- அனைத்து சூழல்களிலும், பொட்டலத்தின் அச்சடிக்கப்பெற்ற பகுதி, பொருள் வில்லை அல்லது முத்திரைப் பகுதியின் உயரத்தையும் அகலத்தையும் கொண்டு முகப்புப் பகுதி நிர்ணயிக்கப்படுகிறது.
- பொட்டலத்தில் அச்சடிக்கப்பெற்ற பகுதி, பொருள் வில்லை அல்லது முத்திரைப் பகுதி ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் இருந்தால், மொத்த முகப்பின் பரப்பளவு பின்வருமாறு கணக்கிடப்படும் (படம் 3 பாருங்கள்):
  a) மொத்த உயரம் (H) = அச்சடிக்கப்பெற்ற ஒவ்வொரு பகுதி, பொருள் வில்லை அல்லது முத்திரைப் பகுதி ஆகியவற்றின் மொத்த உயரம்
  b) மொத்த அகலம் (W) = அச்சடிக்கப்பெற்ற ஒவ்வொரு பகுதி, பொருள் வில்லை அல்லது முத்திரைப் பகுதி ஆகியவற்றின் ஆக அகலமான பகுதியின் அகலம்

Penempatan pada Pembungkusan – Multipek

பொட்டலத்தில் அமைவிடம் – பல்பொருட்களைக் கொண்ட பொட்டலங்கள்

Ruang FOP multipek
பல்பொருள் பொட்டலங்களின் முகப்புப் பரப்பளவு

Rajah 1: Ruang FOP multipek yang memenuhi senario (a)
படம். 1: சூழ்நிலை (a)-க்கு உகந்த பல்பொருள் பொட்டலத்தின் முகப்புப் பரப்பளவு

Rajah 2: Ruang FOP multipek yang memenuhi senario (b)
படம். 2: சூழ்நிலை (b)-க்கு உகந்த பல்பொருள் பொட்டலத்தின் முகப்புப் பரப்பளவு



Garis Panduan Pembungkusan Umum

Multipek ialah pek yang mengandungi beberapa unit produk minuman prabungkus individu, yang dikelompokkan dan dijual bersama di dalam pembungkusan luar seperti pembalut plastik atau pek atau kotak kadbod.

Tanda itu boleh ditandakan pada atau dilampirkan dengan selamat pada:

a. Permukaan FOP pembungkusan luar multipek dan bukan unit minuman pra-bungkus Nutri-Gred, jika pembungkusan luar multipek termasuk kenyataan bahawa setiap unit dalam bungkusan itu tidak boleh dijual secara berasingan atau penyata yang membawa erti serupa seperti (contoh. “Tidak boleh dijual secara berasingan”), seperti yang dilihat dalam Rajah 1; atau

b. Permukaan FOP bagi setiap unit minuman prabungkus Nutri-Grade multipek, dan bukan pembungkusan luar multipek, jika pembungkusan luar multipek itu lutsinar sepenuhnya (cth. lengan plastik jernih) dan tanda Nutri-Grade pada setiap unit dalam multipek kelihatan jelas oleh bakal pembeli melalui pembungkusan luar, seperti yang dilihat dalam Rajah 2.

Industri juga boleh menandakan atau melampirkan tanda Nutri-Gred dengan selamat pada kedua-dua permukaan hadapan pek setiap unit minuman individu dan pembungkusan luar multipek, untuk memenuhi Peraturan 184C(3).” Harap bantu laraskan perenggan ini ke kiri dan jangan mengengsot.

Maklumat lanjut mengenai bila senario di atas akan digunakan boleh didapati dalam Dokumen Peraturan Makanan dan Panduan Industri.

பொட்டலமிடுவதற்கான பொதுவான வழிகாட்டிக் குறிப்புகள்.

முன்னரே பொட்டலமிடப்பட்ட பல்வேறு தனித்தனி பானங்களைக் கொண்டிருக்கும் பொட்டலமே பல்பொருள் பொட்டலமாகும். அவை பிளாஸ்டிக் தாள் அல்லது அட்டைப் பெட்டி கொண்டு மொத்தமாகப் பொட்டலமிடப்பட்டு விற்கப்படுகின்றன.

முத்திரையானது பின்வரும் முறைகளில் குறிக்கப்படலாம் அல்லது இறுக்கமாக இணைக்கப்படலாம்:

a) படம் 1-இல் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புறத்தில், பொட்டலத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் தனித்தனியாக விற்கக் கூடாது என்ற வாசகம் (எ.கா. “தனித்தனியே விற்கக் கூடாது”) இடம்பெற்றிருந்தால் Nutri-Grade பானங்களைக் கொண்ட பல்பொருள் பொட்டலங்களில் வெளிப்புறத்தின் முகப்புப் பரப்பளவில் முத்திரை இடம்பெற்றிருக்கவேண்டும்; முன்னரே பொட்டலமிடப்பட்ட Nutri-Grade பானங்களின் தனித்தனிப் பொட்டலங்களில் அன்று; அல்லது

b) பல்பொருள் பொட்டலங்கள் ஒளி புகும் வண்ணம் அமைந்திருந்தால், (எ.கா. பிளாஸ்டிக் பொட்டலம்), முன்னரே பொட்டலமிடப்பட்ட Nutri-Grade பானங்களின் தனித்தனிப் பொட்டலங்களில் முகப்புப் பரப்பளவில் முத்திரை இடம்பெற்றிருக்கலாம்; பல்பொருள் பொட்டலங்களின் வெளிப்புறப் பொட்டலத்தில் அன்று. ஒவ்வொரு பொருளிலும் உள்ள Nutri-Grade முத்திரையானது, படம் 2-இல் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று, வருங்கால வாடிக்கையாளருக்குத் தெளிவாகப் புலப்படும் வகையில் இடம்பெற்றிருக்கவேண்டும்.

விதிமுறை 184C(3)-க்கு இணங்க, தொழில்துறை, ஒவ்வொரு பொருளின் முகப்புப் பரப்பளவிலும், பல்பொருள் பொட்டலத்தின் வெளிப்புறப் பொட்டலத்தின் முகப்புப் பரப்பளவிலும்Nutri-Grade முத்திரையைக் குறிக்கலாம் அல்லது பாதுகாப்பாக இணைக்கலாம்.

மேற்குறிப்பிட்ட சூழல்கள் எத்தகைய நிலையில் பொருந்தும் என்பது பற்றிய மேல் விவரங்கள், உணவுக் கட்டுப்பாடுகள், தொழில்துறை வழிகாட்டி ஆவணத்தில் கிடைக்கப்பெறும்.

Saiz tanda
முத்திரையின் அளவு

Sisi panjang Varian Melintang
கிடைநிலை மாற்றுருவின்
நீளமான பக்கம்





Sisi panjang Varian Menegak
நிமிர்நிலை மாற்றுருவின் நீளமான பக்கம்







Contoh 1:
Kotak karton dengan ruang FOP yang besar
உதாரணம் 1: பெரிய முகப்புப் பரப்பளவைக் கொண்ட அட்டைப் பெட்டி

Ukuran Panjang Sisi Panjang Varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கம்

= (H+W) / 7
= (200mm+70mm) / 7
= 38.6mm

Ukuran Panjang minimum varian melintang untuk pembungkusan ini ialah 38.6mm

இந்தப் பொட்டலத்தின் கிடைநிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம், 38.6 மில்லிமீட்டர்.

Contoh 2:
Kotak karton dengan ruang FOP yang kecil
உதாரணம் 2: சிறிய முகப்புப் பரப்பளவைக் கொண்ட அட்டைப் பெட்டி

Ukuran Panjang Sisi Panjang Varian Menegak
நிமிர்நிலை மாற்றுருவின் நீளமான பக்கம்

= (H+W) / 7
= (150mm+40mm) / 7
= 27.1mm

Ukuran Panjang minimum varian menegak untuk pembungkusan ini ialah 27.1mm

இந்தப் பொட்டலத்தின் நிமிர்நிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம், 27.1 மில்லிமீட்டர்.

Contoh 3:
Tin dengan Ruang FOP yang kecil
உதாரணம் 3: சிறிய முகப்புப் பரப்பளவைக் கொண்ட தகரக் குளவை

Ukuran Panjang Sisi Panjang Varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கம்

= (H+W) / 7
= (80mm+55mm) / 7
= 19.3mm (lebih pendek daripada saiz minimum)
= 19.3 மில்லிமீட்டர் (குறைந்தபட்ச அளவைக் காட்டிலும் நீளம் குறைவு)
= 19.8mm (genapkan hingga ke ukuran minimum)
= 19.8 மில்லிமீட்டர் (குறைந்தபட்ச அளவிற்கு மாற்றப்பட்டது)

Ukuran Panjang minimum varian melintang untuk pembungkusan ini ialah 19.8mm

இந்தப் பொட்டலத்தின் கிடைநிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம், 19.8 மில்லிமீட்டர்.

Pengiraan Saiz Tanda

Saiz tanda Nutri-Grade harus bersekadar dengan kawasan permukaan FOP dan dikira seperti berikut:

Ukuran Panjang sisi panjang tanda Nutri-Grade = (H+W) / 7

Tanda Nutri-Grade boleh lebih besar dari saiz yang dikira tetapi tidak boleh lebih kecil dari yang dihasilkan dari pengiraan.

Saiz Minimum

Untuk mudah dibaca, varian melintang tidak boleh lebih kecil dari 19.8mm lebar kali 8.5mm tinggi dan varian menegak tidak boleh lebih kecil dari 8.5mm lebar dan 19.8mm tinggi. Ukuran minimum hanya boleh digunakan apabila ruang susun atur sangat terhad.

முத்திரையின் அளவைக் கணக்கிடுதல்

Nutri-Grade முத்திரையின் அளவு, முகப்பின் மேற்பரப்புடன் ஒப்பு நோக்க, சரியான அளவு விகிதத்தைக் கொண்டிருக்கவேண்டும். அது, பின்வரும் முறையில் கணக்கிடப்படவேண்டும்:

Nutri-Grade முத்திரையின் நீண்ட பக்கத்தின் நீளம் = (H+W) / 7

Nutri-Grade முத்திரை, கணக்கிடப்பட்ட அளவைக் காட்டிலும் பெரிதாக இருக்கலாம்; ஆனால், குறைவாக இருக்கக்கூடாது.

குறைந்தபட்ச அளவு

படிப்பதற்கு உகந்த வகையில் இருப்பதை உறுதிசெய்ய, கிடைநிலை மாற்றுரு 19.8 மில்லிமீட்டர் அகலம், 8.5 மில்லிமீட்டர் உயரம் ஆகியவற்றுக்குக் குறைவாக இருக்கக்கூடாது; நிமிர்நிலை மாற்றுரு 8.5 மில்லிமீட்டர் அகலம், 19.8 மில்லிமீட்டர் உயரம் ஆகியவற்றுக்குக் குறைவாக இருக்கக்கூடாது. முகப்பின் பரப்பளவு மிகுந்த தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் சூழ்நிலையில் மட்டுமே குறைந்தபட்ச அளவு பயன்படுத்தப்படவேண்டும்.

Penggunaan tanda Sempena Lambang Pilihan Lebih Sihat (HCS)
ஆரோக்கியத் தேர்வுச் சின்னத்துடன் முத்திரையைப் பயன்படுத்துதல்





Ukuran lebar minimum HCS ialah 15mm.
Sekiranya ukuran lebar HCS kurang dari 19.8mm, tanda Nutri-Grade akan kekal pada ukuran minimum 19.8mm.

Tanda Nutri-Grade akan terarah ke kiri merujuk kepada penempatan HCS.

HCS ஆரோக்கியத் தேர்வு சின்னத்தின் குறைந்தபட்ச அகலம் 15 மில்லிமீட்டர்.

ஆரோக்கியத் தேர்வு சின்னத்தின் அகலம் 19.8 மில்லிமீட்டருக்குக் குறைவாக இருந்தால், Nutri-Grade முத்திரை அதன் குறைந்தபட்ச அளவான 19.8 மில்லிமீட்டரைக் கொண்டிருக்கும்.

Nutri-Grade முத்திரை, ஆரோக்கியத் தேர்வு சின்னத்தின் இடது புறத்தில் அமைந்திருக்கவேண்டும்.

Penggunaan tanda Nutri-Grade pada produk yang disahkan HCS perlu mematuhi perkara berikut:

1. Garis panduan penggunaan tanda Nutri-Grade dan HCS mesti dipatuhi (rujuk kepada Lambang Pilihan Lebih Sihat & Garis Panduan Penggunaan Pengidentifikasi untuk garis panduan penggunaan HCS).
2. Apabila terletak bersebelahan satu sama lain, ruang kosong minimum akan mengikuti salah satu tanda Nutri-Grade atau HCS, bergantung pada mana yang lebih besar saiznya.
3. Ukuran tanda Nutri-Grade harus ditentukan berdasarkan formula pada Bahagian 4.3, tetapi tidak lebih kecil dari 19.8 mm pada sisi panjang.
4. Tanda Nutri-Grade hanya boleh digunakan dalam bentuk warna sepenuh.

“ஆரோக்கியத் தேர்வு” சின்னத்துடன் சான்றளிக்கப்பட்ட பொருட்களின் Nutri-Grade முத்திரையின் பயன்பாடு பின்வரும் நிபந்தனைகளைப் பின்பற்றவேண்டும்:

1. Nutri-Grade முத்திரை, ஆரோக்கியத் தேர்வு சின்னம் ஆகிய இரண்டின் பயன்பாட்டு வழிகாட்டிக் குறிப்புகளும் பின்பற்றப்படவேண்டும் (ஆரோக்கியத் தேர்வு சின்னத்திற்கான பயன்பாட்டு வழிகாட்டிக் குறிப்புகளுக்கு நிறுவன அடையாள வழிகாட்டிக் குறிப்பைப் பாருங்கள்).
2. ஒன்று மற்றொன்றுக்கு அருகில் இடம்பெறும்போது, குறைந்தபட்ச வெற்றிடமானது, Nutri-Grade முத்திரை அல்லது ஆரோக்கியத் தேர்வு சின்னம் ஆகியவற்றின் விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும் (எது பெரியது என்ற அடிப்படையில்).
3. Nutri-Grade முத்திரையின் அளவானது, பகுதி 4.3-இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு முறையைக் கொண்டு நிர்ணயிக்கப்படவேண்டும். ஆனால், அதன் நீண்ட பக்கம் 19.8 மில்லிமீட்டருக்குக் குறைவாக இருக்கக் கூடாது.
4. Nutri-Grade முத்திரையானது, அதன் முழுமையான வண்ண வடிவில் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

Permohonan yang sempurna
ஏற்புடைய பயன்பாடுகள்



Latar Belakang Warna Hitam 5%
5% இலேசான கருப்புப் பின்னணிகருப்புப் பின்னணி



Latar Belakang Warna Hitam 5%
40% இலேசான கருப்புப் பின்னணி



Latar Belakang warna Terang Bersenggat
இலேசான, மாறுபடும் பின்னணி



Ruang Gambar Kurang Sesak
அச்சீடுகள் மிகுதியாக இல்லாத புகைப்படப் பின்னணி

Permohonan yang sempurna

Tanda Nutri-Grade harus digunakan dalam bentuk warna sepenuh dalam semua keadaan. Tanda tersebut hendaklah dilekatkan pada latar belakang yang jelas atau latar putih seberapa boleh. Ia juga boleh diterapkan pada latar belakang gelap atau fotografi selagi latar belakang ini tidak terlalu sesak atau mengganggu perhatian dan tidak akan sukar dibaca.

பொருத்தமான பயன்பாடு

எல்லா சூழல்களிலும், Nutri-Grade முத்திரை அதன் முழு வண்ண வடிவில் பயன்படுத்தப்படவேண்டும். அது, கூடுமானவரை, தெளிவான அல்லது வெள்ளைப் பின்னணியில் இடம்பெற்றிருக்கவேண்டும். பின்னணி அச்சீடுகள் மிகுதியாக இல்லாமல் அல்லது கவனத்தைத் திசை திருப்பாமல் இருப்பதோடு, முத்திரையைப் படிக்கக்கூடிய சாத்தியம் பாதிக்கப்படாத நிலையில் மட்டுமே கருமையான அல்லது புகைப்படப் பின்னணியில் முத்திரையைப் பயன்படுத்தலாம்.

Permohonan yang Tidak Diluluskan

அனுமதிக்கப்படாத பயன்பாடுகள்

Penggunaan tanda Nutri-Grade harus konsisten, mengikut garis panduan dalam dokumen ini. Berikut ialah contoh penggunaan Label Nutri-Grade yang tidak diluluskan:

Sila jangan:

1. Tukar atau ubah tanda Nutri-Grade dengan cara apa pun seperti memiringkan atau memutarkan tanda.
2. Gabungkan tanda itu dengan elemen grafik lain atau gunakan sebagai tera air.
3. Skala tanda secara tidak seimbang.
4. Potong atau skala mana-mana bahagian tanda.
5. Terbalikkan atau cerminkan tanda tersebut.
6. Tambahkan bayangan, cahaya, garis bentuk atau ubah warna tanda Nutri-Grade atau cipta corak atau elemen reka bentuk.
7. Letakkan di mana-mana latar belakang yang terlalu sesak atau mengganggu perhatian.
8. Ubah atau menggantikan mana-mana fon. Hanya fon Arial Bold yang harus digunakan.
9. Putar varian melintang ke varian menegak dan sebaliknya.

இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டிக் குறிப்புகளுக்கு ஏற்ப, Nutri-Grade முத்திரையின் பயன்பாடு சீராக இருக்கவேண்டும்.

Nutri Grade முத்திரை அனுமதிக்கப்படாத வகையில் பயன்படுத்தப்படும் உதாரணங்கள் பின்வருமாறு:

தயவுசெய்து பின்வருபவற்றைச் செய்ய வேண்டாம்:

1. முத்திரையைக் கோணலாக்குதல் அல்லது சுழற்றுதல் போன்று Nutri-Grade முத்திரையை எவ்வகையிலும் மாற்றுதல் அல்லது திருத்துதல்.
2. வேறோர் உருவச்சித்திரத்துடன் இணைத்தல் அல்லது நீர்க்குறியாகப் பயன்படுத்துதல்.
3. சமச்சீரற்ற வகையில் முத்திரையின் அளவை மாற்றுதல்.
4. Nutri-Grade முத்திரையின் ஏதாவது ஒரு பகுதியை நீக்குதல் அல்லது அளத்தல்
5. முத்திரையைத் தலைகீழாகத் திருப்புதல்.
6. Nutri-Grade முத்திரையின் நிறங்களை மாற்றுதல் அல்லது நிழற்படம், ஒளிவட்டம், சுற்றளவுக் கோடு ஆகியவற்றைச் சேர்த்தல் அல்லது பொட்டுக்குறி போன்ற வடிவமைப்பை உருவாக்குதல்
7. அச்சீடு அதிகமுள்ள அல்லது கவனத்தைத் திசைதிருப்பக்கூடிய பின்னணியில் பயன்படுத்துதல்
8. எழுத்துருக்கள் எவற்றையும் மாற்றுதல் அல்லது மாற்றியமைத்தல். தடித்த வடிவிலான 'Arial' எழுத்துரு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.
9. கிடைநிலை மாற்றுருவை நிமிர்நிலை மாற்றுருவாகவும், நிமிர்நிலை மாற்றுருவை கிடைநிலை மாற்றுருவாகவும் திருப்புதல்.

Varian Melintang – Karton dan Minuman dalam paket

கிடைநிலை மாற்றுரு – அட்டைப் பெட்டிகளும் பொட்டல பானங்களும்

Ukuran Panjang bahagian Sisi Panjang varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கத்தின் நீளம்

= (H+W) / 7
= (160mm+70mm) / 7
= 32.9mm

Ukuran Panjang minimum varian melintang untuk pembungkusan ini ialah 32.9mm
இந்தப் பொட்டலத்திற்கான கிடைநிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம் 32.9 மில்லிமீட்டர்.

Ukuran Panjang Bahagian Sisi Panjang varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கத்தின் நீளம்

= (H+W) / 7
= (80mm+70mm) / 7
= 21.4mm

Ukuran Panjang minimum varian melintang untuk pembungkusan ini ialah 21.4mm
இந்தப் பொட்டலத்திற்கான கிடைநிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம் 21.4 மில்லிமீட்டர்.

Ukuran Panjang Bahagian Sisi Panjang Varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கத்தின் நீளம்

= (H+W) / 7
= (130mm+55mm) / 7
= 26.4mm

Ukuran Panjang minimum varian melintang untuk pembungkusan ini ialah 26.4mm
இந்தப் பொட்டலத்திற்கான கிடைநிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம் 26.4 மில்லிமீட்டர்.

Ukuran Panjang Bahagian Sisi Panjang Varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கத்தின் நீளம்

= (H+W) / 7
= (90mm+60mm) / 7
= 21.4mm

Ukuran Panjang minimum varian melintang untuk pembungkusan ini ialah 21.4mm
இந்தப் பொட்டலத்திற்கான கிடைநிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம் 21.4 மில்லிமீட்டர்.

Penggunaan tanda Nutri-Grade yang tepat pada Karton dan Minuman Paket

Sila pastikan bahawa:

1. Varian melintang digunakan sebagai pilihan asal, seberapa boleh.
2. Formula (H+W)/7 digunakan untuk mengira ukuran saiz minimum tanda Nutri-Grade pada FOP (rujuk bahagian 4.3 untuk panduan).

Sekiranya HCS boleh digunakan, rujuk kebahagian 4.4 dan Lambang Pilihan Lebih Sihat & Garis Panduan Pengunaan Pengidentifikasi.

அட்டைப் பெட்டிகளிலும் பொட்டல பானங்களிலும் Nutri-Grade முத்திரையின் சரியான பயன்பாடு

தயவுசெய்து பின்வருபவற்றை உறுதிசெய்யவும்:

1. கூடுமானவரை, கிடைநிலை மாற்றுரு அடிப்படையானதாகப் பயன்படுத்தப்படவேண்டும்.
2. முகப்பில் இடம்பெறும் Nutri-Grade முத்திரையின் குறைந்தபட்ச அளவைக் கணக்கிடுவதற்கு (H+W)/7 கணக்கீட்டு முறை பயன்படுத்தப்படவேண்டும் (வழிகாட்டிக் குறிப்புகளுக்கு, பிரிவு 4.3 பாருங்கள்).

ஆரோக்கியத் தேர்வு சின்னம் ஏற்புடையதாக இருப்பின், பிரிவு 4.4-யையும், ஆரோக்கியத் தேர்வு சின்னம், பயன்பாடு ஆகியவற்றுக்கான வழிகாட்டிக் குறிப்புகளையும் பாருங்கள்.

Varian Melintang – Tin dan botol PET

கிடைநிலை மாற்றுரு – தகரக் குவளைகளும் PET போத்தல்களும்

Ukuran Panjang Sisi Panjang Varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கத்தின் நீளம்

= (H+W) / 7
= (115mm+55mm) / 7
= 24.3mm

Ukuran Panjang minimum varian melintang untuk pembungkusan ini ialah 24.3mm

இந்தப் பொட்டலத்திற்கான கிடைநிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம் 24.3 மில்லிமீட்டர்.

Ukuran Panjang Sisi Panjang Varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கத்தின் நீளம்

= (H+W) / 7
= (80mm+55mm) / 7
= 19.3mm
= 19.8mm (genapkan hingga ke ukuran minimum)
= 19.8 மில்லிமீட்டர் (குறைந்தபட்ச அளவிற்கு மாற்றப்பட்டது)

Ukuran Panjang minimum varian melintang untuk ini pembungkusan adalah 19.8mm

இந்தப் பொட்டலத்திற்கான கிடைநிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம் 19.8 மில்லிமீட்டர்.

Ukuran Panjang Sisi Panjang Varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கத்தின் நீளம்

= (H+W) / 7
= (90mm+80mm) / 7
= 24.3mm

Ukuran Panjang minimum varian melintang untuk pembungkusan ini adalah 24.3mm

இந்தப் பொட்டலத்திற்கான கிடைநிலை மாற்றுருவின் குறைந்தபட்ச நீளம் 24.3 மில்லிமீட்டர்.

Ukuran Panjang Sisi Panjang Varian Melintang
கிடைநிலை மாற்றுருவின் நீளமான பக்கத்தின் நீளம்

= (H+W) / 7
= (75mm+60mm) / 7
= 19.3mm
= 19.8mm (genapkan hingga ke ukuran minimum)
= 19.8 மில்லிமீட்டர் (குறைந்தபட்ச அளவிற்கு மாற்றப்பட்டது)

